சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

அமர்வு வழக்கு எண் 38/2009

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 7 (lw 10) | நாள் | 27.11.2024 |
| பெயர் | காமாட்சி | ஜாதி | Brahmin |
| தந்தை பெயர் R-Rajagopal | | தொழில் | காவல் ஆய்வாளர் ஓய்வு |
| கிராமம் சீர்காழி | சீர்காழி | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 61/2024 |

(1,3,4,5,எதிரிகள் ஆஜர். 2, 6 ஆம் எதிரிகள் இறந்துவிட்டனர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் சென்னை அடையாறு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து 2018 ம் வருடம் ஓய்வு பெற்று சீர்காழியில் வசித்து வருகிறனே். 10.06.2007 அன்று நான் பூம்புகார் சட்டம் ஒழுங்கு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது 10.06.2007 அன்று காலை 20.30 மணிக்கு ராஜராஜன், த/பெ. சுப்ரமணியன், CRC ஓட்டுநர், மயிலாடுதுறை கிளை, கும்பகோணம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்றேன் **அந்த புகார் அசாஆ.2** ஆகும். அந்த புகாரின்பேரில் பூம்புகார் காவல் நிலைய குற்ற எண். 123/2007 ச/பி. 147, 341, 323, 332 இதச மற்றும் 3(1) PPD Act ஆக வழக்கு பதிவு செய்தேன். அந்த **முதல் தகவல் அறிக்கை அசாஆ 3** ஆகும். வழக்கு கோப்பை காவல் ஆய்வாளர் பார்வைக்கு புலன் விசாரணைக்காக வைத்துகொண்டேன். காவல் ஆய்வாளர் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்.

**1,3,4,5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

புகார் கொடுக்க புகார் தாரர் மட்டும் வந்தாரா அல்லது அவரது மேலதிகாரியுடன் புகார் கொடுக்க வந்தாரா என்றால் மேலதிகாரியுடன் சேர்ந்து தான் வந்தார். இந்த விவரத்தை முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை. புகார் அடித்தல் திருத்தல் உடன் உள்ளது என்றால் அப்படியெல்லாம் இல்லை சரியாகத்தான் உள்ளது. எதிரியின் பெயர் நேரம், சம்பவ இடம் ஆகியவை அடித்து திருத்தப்பட்டுள்ளது என்றால் சரி. புகாரில் அடையாளம் தெரியாத நபர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அகோரம் மற்றும் பெயர்

தெரியாத நபர்கள் என்று குறிப்பிடப்பட்டள்ளது. எதிரி அரசியல் கட்சியின் முக்கிய பிரமுகர் என்பதால் பொய்யான புகார் பெற்று அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

27/11/2024

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளித்தார் அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

27/11/24

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

27/11/24